# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண்.108/2019

பி.வா.சா.2– குறுக்கு விசாரணை – நாள் 17–04–2026.

பெயர் = பரமசிவம்

பி.வா.சா.–2 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் கு.வி.–

(1) வழக்கில் சாட்சியமளிக்க நீதிமன்றத்திலிருந்து சம்மன் வந்ததா என்றால் இல்லை. சாட்சியமளிக்க யார் என்னை அழைத்து வந்தார்கள் என்றால் சுப்புராஜ் பிரதிவாதி அழைத்து வந்தார். நான் கையெழுத்து செய்த நிரூபணவாக்குமூலம் எங்குவைத்து தயார் செய்யப்பட்டது என்றால் வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து. அதில் உள்ள விவரங்கள் யார் சொன்னது என்றால் நான் தான் சொன்னேன். இந்த வழக்கு யார்மீது போட்டுள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். சுப்புராஜ் பெயரில் தாவாச்சொத்து சம்பந்தமான ஆவணங்கள் பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. வாதிக்கு தாவா சொத்து சம்பந்தமான ஆவணங்கள் என்ன உள்ளது என எனக்குத் தெரியாது என்றால் சரிதான். சுப்புராஜ் தாக்கல் செய்துள்ள ஆவணத்தின்படி தாவாச்சொத்திற்கும் அவருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. சுப்புராஜ் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2026.04.17 16:04:15 +0530